Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (23 - 03 - 1991) சனிக்கிழமை ஓசை: 33

## இரத்ததானம் செய்ய மாணவர் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னாரிப் பகுதியில் கடந்தசில நாட்களாக நடைபெற்றுவரும் தாக்குதல்களில் காயமடையும் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான இரத்தத்தினை வழங்குவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்த பாடசாலை மாணவிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். கடந்த திங்கள்முதல் யாழ். மாவட்ட பாடசாலைகளின் மாணவர்கள் இரத்த (4 ஆம்பக்கம் பார்க்க)

# சிலாவத்துறை முகாம் மீது 4 ஆவது நாளாகத் தாக்குதல்

(மன்னார்)

சிலாவத்துறை இராணுவ முகாம் நான்காவது நாளாக நேற்றும் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை நேற்று முனதினம் புலிகளால் கைப்பற்றப்பட்ட கொக்குப்படையான் இராணுவ முகாமிலிருந்து பெருமளவிலான ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலை முறியடிக்க சிறிலங்கா விமானப்படையும், கடற்படையும் பெரும் எடுப்பிலான தாக்குதல்களை புலிகளின் நிலைகள் மீது கொடுத்துள்ள போதிலும் புலிகள் முப்படைகளுக்கும் எதிரான தாக்குதலை தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

இம் மோதலில் சிறிலங்காவின் இராணுவப் பிரிவு முதலியமான கலாட்படையான சஜபாகு ரெஜிமெண்டைச் சேர்ந்த ஆறாவது படைப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

அதேவேளை நேற்று முன்தினம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த கொக்குப்படையான் முகாமில் இருந்து பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவில் மோதல்; இராணுவம் பின்வாங்கியது

மன்னார் வவுனியா வீதியில் ஆலமந்திருக்கும் இராணுவ காவலரணில் இருந்து வெளியேறமுயன்ற இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4-00 மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் புகுந்துகொண்டனர். இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

## தெல்லிப்பளை, கட்டுவனில் பீப்பாக் குண்டுவீச்சு

(செ. த. மை)

தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் நேற்று நண்பகல் அவ்ரோ விமானமொன்று பீப்பாக் குண்டுகளை வீசியது. அதேசமயம் முகாம்களிலிருந்து இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

நண்பகல் 12-30 லிருந்து பிற்பகல் 3 மணி வரை 6 பீப்பாக் குண்டுகளை 'அவ்ரோ' வீசித் தள்ளியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், குரும்பசிட்டி, சுன்னாகம், உரும்பராய் ஆகிய பகுதிகளையும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### றியாஸ்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த 20 ஆம் திகதி பாம்பு தீண்டிய போராளி றியாஸ் (ராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம்) என்பவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்

## ஊர்காவற்படை வீரர் மரணம்

(திருகோணமலை)

துப்பாக்கி ஒன்றினை சுத்தம் செய்து கொண்டிருந்த ஊர்காவற்படை வீரர் ஒருவர் அத்துப்பாக்கி தற்செயலாக வெடித்ததின் காரணமாக உயிரிழந்தார்.

இவர் ஒருபாடசாலைமாணவர் எனவும் ஓய்வு நேரங்களில் பகுதி நேரக் கடமையாக ஊர்காவல் வேலையை மேற்கொண்டார் எனவும் மரண விசாரணையின்போது தெரியவந்தது.

மிருந்தபுரம் வாசியான ஏ எல் ஞானசிறி என்பவரே இவ்வாறு மரணமானவர்.

## பத்திரிகை விநியோகம்

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களுக்குமான இம்மாத ''விடுதலைப்புலிகள்'' பத்திரிகையை நிலையத்தின் தலைவர் அல்லது செயலாளரின் கடிதத்துடன் வந்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கொண்டாவில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி மாத வவுச்சர்கள் அலுவலகத்தில் நேரடியாக வழங்கப்பட மாட்டாது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்த 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாத வவுச்சர்கள் எவையும் நேரடியாக அலுவலகத்தில் கொடுக்கப்பட மாட்டாது என ஓய்வூதிய பிரிவுகள் அதிகாரி அறிவுறுத்தல் விடுத்துள்ளனர் - இந்த வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவ்வதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இடம் பெயர்ந்தோருக்கான வவுச்சர்கள் வரும் 27 ஆம் திகதிக்குப் பின்னர் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்திலிருந்து அதிகரிக்கப்படவேண்டிய ஓய்வூதிய நிலுவைப் பணம் 1991 ஆம் ஆண்டு ஜனவரி ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## சித்திரை வருடப்பிறப்பின் முன் இலவச நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் ஏழாம் கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை நிறைவு பெறும் என நேற்று இடம்பெற்ற கூட்டுறவுச்சங்க தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இருவாரங்களுக்கு அனைத்து மக்களுக்குமான இலவச உலர் உணவு கொடுப்பனவு சித்திரைவருடப் பிறப்புக்கு முன்னர் கொடுத்து முடிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ் செயலக மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (மே)

## 8 போராளிகள் புகழுடல்கள் நேற்று யாழ். வந்தன

(மன்னார்)

மன்னாரில் சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலில் நேற்று வீரமரணமடைந்த எட்டுப் போராளிகளின் புகழுடம்புகள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

★ இ. பெ. சூரியகுமார் (கனகராசா விக்னேஸ்வரன், புத்தூர் மேற்கு புத்தூர்),

★ கோணேஸ் சின்னத்தம்பி குமார், நவக்கிரி புத்தூர் மேற்கு)

★ சதா (நடராசா திலீப்குமார் வரணிவடக்கு வரணி)

★ றோபேட் (குலநாதன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மாவீரருக்கு பெருமளவு மக்கள்அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் கொக்குப்படையான், சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த ஆறு போராளிகளின் புகழுடல்கள் நேற்றுக் காலை சண்டிலிப்பாய் சந்தைப் பகுதியில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன

பெருந்தொகையான பொதுமக்களும், மாணவர்களும் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னைபூபதி ஞாபகார்த்த பொது அறிவுப்போட்டி

அன்னை பூபதி ஞாபகார்த்தமாக பொது அறிவுப் போட்டி ஒன்றை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அடுத்த மாதம் 12 ஆம் திகதி கோட்டமட்டத்தில் நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் வன்னி, மன்னார் மாவட்டங்களிலும் நடாத்தப்படவுள்ளதாகவும் 15 வயதுக்கு மேற்பட்ட கீழ்ப்பட்ட ஆகிய இருபிரிவுகளாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆகும் மேலதிக விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## யாழ். மாவட்டத்திற்கென 165 மில். கட்டுநிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குரிய சுமார் 165 மில்லியன் கட்டுநிதி திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணம் அடுத்துஇங்கு வரவிருக்கும் கப்பல்மூலம் எடுத்து வரப்படும் இப்பணம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கும் நிவாரணக் கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்படவிருக்கின்றன. ஆனால் மாவட்டத்தின் முழுமையான கட்டுநிதித் தேவை சுமார் 252 மில்லியன் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## குவைத்திலிருந்து திரும்பியோருக்கு நஷ்டஈடு வழங்க கொள்கையளவில் இணக்கம்

(கொழும்பு)

வளைகுடாப் பிரச்சினையால் குவைத்தில் இருந்து நாடு திரும்பிய 75.000 பேர்களுக்கு நஷ்டஈடு வழங்க சர்வதேச தொழில் அமைப்பு கொள்கையளவில் ஏற்றுள்ளது.

நஷ்டஈடு வழங்குதல் உட்பட அவர்களுக்குக் கொடுக்குமாறு இலங்கை கேட்டிருந்த மற்றைய நிவாரணங்களையும் ஒரு வருடத்திற்குள் வழங்குவதன் சாத்தியம் பற்றி ஆராயஇருபிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் இணைந்து செயற்படுவார்கள் அத்துடன் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் விபரங்களை பரிசீலித்தும் வருகின்றனர்.

## வரி விளம்பரம்

### தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்: எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B.2169)

### விற்பனைக்கு

நிதான விலையில் உப்பு விற்பனைக்கு உண்டு. கருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்பும் கட்டி உப்பும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கட்டி உப்பு மொத்தவிலை 6.50 சில்லறை விலை ரூ 7.00 கிடைக்குமிடம் ஸ்ரீ சாயி மில் 76 (222) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். R/1200

### SLEAS

SLEAS- பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச் சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா எம். ஏ. (R-1204)

### மில்க்வைற்

திரவ சவர்க்காரம்

அடைத்து வரும் அரை வெற்றுப் போத்தல் திருப்பித் தந்து ரூபா1/- பெறவும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். (B- 2182)

### உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைபெற இருக்கும் க. பொ. த உயர்தர பரீட்சையில் 25,000 பரீட்சார்த்திகளும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசு பரீட்சையில் 40,000 பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### காணவில்லை

புலியங்குளத்தைச்சேர்ந்த திரு. தம்பித்துரை பாலசிங்கம் என்ற மனநோயாளி கடந்த 10-3-91 அன்று மானிப்பாய் வைத்தியசாலையில் இருந்து காணமல் போய்விட்டார். இவரது உயரம் சுமார் 5 1/2 அடி, வயது 32 பொதுநிறம் இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. கமலராசா
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி.

(R-1203)

## DSI

இலங்கை தரநிர்ணய சபையினால் SLS முத்திரைபெற்ற உங்கள் அபிமானத்திற்குரிய DSI சைக்கிள் டயர்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**DSI பாவனையகம்**

(ஞானம்ஸ் ஸ்ருடியோ அருகாமை)
281C; சி.பொன்னம்பலம்வீதி,
யாழ்ப்பாணம்.

(B- 2193)

---

★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALFTONE - LINE கலர் புளொக்ஸ் (Blocks)
★ கலர் பிலிம் சுருள்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களை படமாக்குதல் பெருப்பித்தல்
★ பிறேம் போடுதல்
★ ஸ்ரிக்கேஸ் தயாரிப்பாளர்கள்

## கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(B-2091) 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. லேத் மிசின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **பரஞ்சோ ஸ்தாபனம்**
முத்திரைச்சந்தை, நல்லூர். (B/2156)

## MEDICINA ALTERNATIVA ACUPUNCTURE CLINIC
## அக்குபஞ்சர் சிகிச்சை

கொழும்பு அரசவைத்தியசாலையில் விரிவுரையாற்றும் டாக்டரினால் மானிப்பாயில் ஒரு கிளை 11-03-91 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்த்மா, மூட்டுவாதம், பாரிசவாதம், நாரிப் பிடிப்பு, ஒற்றைத்தலைபிடி (Migraine), தோல்வியாதிகள், பாலியல் பிரச்சினைகள், மனநோய் மற்றும் நரம்புதொடர்பான நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இல. 95, யாழ்வீதி, மானிப்பாய்.

(R/ 1198)

## நீங்காத நினைவில்
(மார்ச் 23)
ஆண்டு ஐந்து



❋ **அமரர் கே. டானியல்** ❋
(மக்கள் புரட்சி எழுத்தாளர்)

| இலங்கை மண்ணில் பிறப்பு: | இந்திய மண்ணில் இறப்பு: |
| --- | --- |
| 1923 - 03 - 25 | 1986 - 03 - 23 |

"இலக்கியத்தினால் சகலதையும் சாதிக்க முடியும்; சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்ற மாயத்திரையை கிழித்தெறிந்து வீட்டு வெளியே வாருங்கள். சமூக மாற்றத்திற்கான, உண்மைக்கு விசுவாசமான செயற்பாடுகள நடக்கும்போது வெறும் பார்வையாளனாக மட்டும் நில்லாது அதன் பங்காளர் ஆகுங்கள்."

— கே. டானியல்

என்றும் நினைவோடு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தோழர்கள், பொதுமக்கள்

"வசந்தம்"
76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2174)

---

## முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறியவந்துள்ளோம்.

போலி ஆர் வி ஜி பீடிகள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்

அசல் ஆர். வி ஜி பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றது.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி ஜி பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

ஆர். வி. ஜி நிர்வாகம்
(B-2179) 58, குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

## படமாடம்

உங்களுக்குத் தேவையான படவகைகளைப் பெற்றுக்கொள்ளவும், படங்களுக்குச் சட்டமிடவும், கண்ணாடி வகைகளை விரும்பிய அளவில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும் யாழ்நகரில் நீங்கள் நாட வேண்டிய முன்னணி நிலையம்;

**படமாடம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்:
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

(B/2172)




## மார்ச் 23

1985ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
❋ **குமார்** (இரான்)

1987ஆம் ஆண்டு யாழ். பண்ணை பொலிஸ் வீதி இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த

**ஹில்மன்** (பி. கீர்த்திராஜா-உயிலங்குளம், மன்னார்)
**ராஜ்மோகன்** (அ. ராஜ்குமார் - இளவாலை)
**பண்டிதர்** (வேலணை)
**அருணன்** (சி. ரகுராஜன் - மானிப்பாய்)

1988ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரமரணமடைந்த

**ஜோர்ஜ்** (வில்லியம் றொபேட் - திருமலை)

1989ஆம் ஆண்டு நாயாறு பகுதியில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப்.றெஜினோல்ட்** (இராசையா சின்னராசா)
**மைக்கல்** (சின்னப்பன் ஜோன்சன் குபின்ரன் - மணியம் தோட்டம்)

இதே ஆண்டு வட்டமடுவில் தேசத்துரோகிகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன்சத்தியன்** (ஞானமுத்து சிவானந்தராசா- திருக்கோவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் குமார் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2155)

## ✹ சிந்தனைக்கு ✹

வாழ்க்கையிலிருந்தும், அரசியலிலிருந்தும் விலகுண்டு நின்றால் கல்விபொய்யும் பித்தலாட்டமுமே என்பதை நாம் பகிரங்கமாக என்றும் பிரகடனப்படுத்துவோம்.

— லெனின்


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 23-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## போராட்டப் பயிர் வளர குருதி நீர் பாய்ச்சுக

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த சில தினங்களாக மாணவ, மாணவிகள் இரத்த தானம் செய்ததாகவும், செய்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன தமிழ் மண்ணின் சுதந்திரத்திற்காக ஒருபுறத்தில் போராளிகள் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் வேளையில் மாணவ மாணவிகள் தாமாக முன்வந்து இரத்த தானம் செய்கின்றமை மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டப்படக் கூடியதும் ஒன்றாகும். இது ஏனையோருக்குமான முன்னுதாரணம் ஆகும்.

போர்க்காலச் சூழலில் பல்வேறு வகையில் இரத்தம் சிந்தப்படுகின்றது. இதனால் பலர் மடிவதும் உண்டு. வசதிகள் அற்ற நிலையில் இரத்தப் பெருக்கால் ஒருவர் மரணமடைவது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாக இருக்கலாம். ஆனால் நெருக்கடிப் பகுதியில் இருந்து மீட்டெடுக்கப்பட்டு வைத்தியசாலைக்கு ஒருவர் கொண்டுவரப்பட்ட பின்னர் இரத்தம் இன்மையால் மரணமடைவது என்பது வேதனைக்குரிய விடயமாகும். அதேவேளை இவ்வாறான தொருசம்பவம் நிகழுமானால் அது அச்சமூகத்தின் ஒரு பொறுப்பற்ற செயலுமாகும்.

ஒரு மனிதன் இரத்த தானம் செய்வதனால் பாதிப்படைவதில்லை. இதனை சகல வைத்தியத் துறையினருமே உறுதிப்படுத்தியுள்ளனர். செங்குருதித் துணிக்கைகள் நூற்றிருபது நாட்கள் மட்டுமே தனது வாழ்க்கை வட்டத்தைக் கொண்டவையாகும். இவை அதன்பின்னர் ஈரலில் அழிக்கப்படுகின்றன. அழிக்கப்படும் இந்த செங்குருதித் துணிக்கைகளுக்கு ஈடாக எலும்பு மச்சையில் இருந்து புதிய கலங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன இவ்வாறு நாளாந்தம் 100 லட்சம் கலங்கள் அழிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. இது ஒரு வழமையான நடவடிக்கையாகும், இந்நிலையில் இரதத தானம் செய்வதனால் எலும்பு மச்சை சற்றுக் கூடுதலான புதிய கலங்களை உருவாக்கவேண்டி வருமே ஒழிய வேறு எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

இதனை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும் இதன் மூலம் இரத்த தானம் செய்வதனால் தமது உடல் நலத்திற்கு கேடு விளைந்துவிடக் கூடும் என்ற தப்பான அபிப்பிராயத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும். அதேவேளை, இரத்த தானம் செய்வது சமூகத்தின் கடமை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு போராளி தனது மக்களையும் மண்ணையும் பாதுகாக்க தனது உடல் பொருள் ஆவி யாவற்றையும் அர்ப்பணித்தே போராட்ட களத்தில் நிற்கின்றான். தனது மடிவினால் தனது இனத்தவருக்கு ஒரு சுதந்திர வாழ்க்கையைத் தேடிக் கொடுப்பதே அவன் அடையப் போகும் இலட்சியமாகும். ஆனால் நேரடியாக அவன் எதுவித இலாபத்தையும் அடையப் போவதில்லை தனது மக்கள் மீதும், மண்ணின் மீதும் கொண்ட பாசத்தினாலும், விடுதலையின்மீதுள்ள அவாவினாலும் அவன் அடைவது துன்பமும் வேதனையும் இழப்புக்களும்தான்.

இந்நிலையுடன் ஒப்பிடும் இடத்து இரத்த தானம் என்பது எதுவித இழப்புக்களும் அற்ற ஒரு உதவி மட்டுமே ஆனால், இதனை நாம் வழங்குவதன் மூலம் எமதுவிடுதலைப்போராளிகளையும், எமது இனத்தையும் நாம் காப்பாற்ற உதவியவர்களாவோம். நாம் நேரடியாகப் போராட்டத்தில் பங்கு கொள்ளாவிட்டாலும் போராட்டத்திற்கு உதவினோம் என்ற திருப்தியாவது ஏற்படும். இதற்கு பாடசாலை மாணவர்களின் முன்மாதிரி வரவேற்கத் தக்கதாகும்.

ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் அச்சமூகத்தின் சகல தரப்பினரும் ஏதோ ஒருவிதத்தில் தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்தே ஆகவேண்டும். அப்பொழுதுதான் விடுதலையை வென்றெடுக்கமுடியும். இது அவர்களுக்கு காலம் இட்ட கட்டளையாகும். இது மாணவர்களுக்கும் பொருந்தும்.

எதிர்கால சமுதாயம் இன்றைய மாணவருடையதே. நாளைய சமுதாயம் சுதந்திரத்துடன் தலை நிமிர்ந்து வாழவேண்டும்என்பதற்காகவே இன்றையபோராட்டம் நடைபெறுகின்றது இந்நிலையில்,போராட்டத்திற்கான பங்களிப்பை ஏதோ ஒரு வகையில் மாணவர்களும் வழங்கியேஆகவேண்டும் இதுவிடுதலைக்கு வழிவகுக்கும் என்பதோடு விடுதலையில் தமது பங்களிப்பையும் உறுதிப்படுத்துவதாயும் அமையும்.

# பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி

## அதிகாரிக்குச் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களையும் மற்றும் அத்தியாவசிய பொருள்களையும் கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு பயன்படுத்தப்பட்டுவரும் பருத்தித்துறை இறங்குதுறை புனர்நிர்மாணம் செய்து செலாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்பதை நோக்கினால் எதிர்காலத்தில் வடபகுதிக்கு நிரந்தரமாக கப்பலில்தான் உணவு வருமா என்ற கேள்வி எழுகிறது என யாழ் மாவட்ட செயலக உணவு வழங்கலுடன் தொடர்புடைய அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம்யாழ் அரச அதிபர் பருத்தித்துறை இறங்குதுறை திருத்தவேலைகளை பார்வையிடச்சென்ற விடயம் குறித்தும் அங்கு நடைபெறவிருக்கின்ற திருத்தவேலைகள் பற்றியும் நிருபர்களுக்கு விளக்கமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இருபது அடி நீளமான இறங்குதுறை தற்போது அறுபது அடியுடையதாக மாற்றப்படுள்ளது. மேலும் அறுபது அடி விஸ்தரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் யு. என். எச். சி. ஆர் நிறுவனம் இந்த திருத்த வேலைகளுக்கான செலவைத் தருவதற்கு ஒப்புக்கொண்டு மதிப்பீட்டை அனுப்பும்படி கடிதம் அனுப்பியுள்ளதாகக் கூறி அந்தக் கடிதத்தை எடுத்து வாசித்துக் காட்டினார்.

மேலும் இது தவிர பருத்தித்துறை கடற்கரை வீதி ஓரமாகவும், சற்று கடலுக்குள் விஸ்தரிக்கப்பட்டு இறங்குதுறையாக வீதி ஒன்றையும் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (லோ)

## சட்டமா அதிபர் நடிகர்; ஜனாதிபதி பார்வையாளர்

(கொழும்பு)

கொழும்பில் ஹி எப்பிட் பறயன்னா (He Comes from Jaffna) என்ற அங்கதச் சுவை நாடகம் மார்ச் 26, 27, 28 ஆம் திகதிகளில் மருதானையில் எல்பின்ஸ்டன் தியேட்டரில் மேடையேறவுள்ளது சிங்களவரின் தயாரிப்பான இந்த நடகம் அங்கதச்சுவை என்ற பெயரில் யாழ்ப்பாணத் தமிழரை நையாண்டி செய்வதாகவே அமைந்துள்ளது. இந்த நாடகத்தில் சிறிலங்கா சட்டமா அதிபரும் முக்கியபாத்திரம் ஏற்று நடித்துள்ளார்.

இந்த நையாண்டி நாடகத்தின் பார்வையாளர்களில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவும் ஒருவராக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளாராம்.

உத்தியோகஸ்தர் நியமனங்களில்

## வடபகுதி மருத்துவமனைகள் கொழும்பால் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அரச மருத்துவமனைகளில் நிலவும் மத்திய தர தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள் மற்றும் எழுதுவினைஞர் ஆகியவர்களுக்குரிய வெற்றிடங்களை நிரப்பும் அரசின் நடவடிக்கைகளில் வடபகுதி மருத்துவ மனைகள் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கை தொடர்பாக சுகாதார, மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சரின் விசேட உத்தரவின்படி மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது இவ் அமைச்சு போட்டிப் பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடாத்தி வருகின்றன. இப்பரீட்சைகளுக்கு வடபகுதியில் இருந்து எவரும் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் இப்பகுதி மருத்துவமனைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப முடியாத நிலையும் மேற்படி நடவடிக்கைகள் எதுவும் செய்யாமல் புறக்கணிக்கப்படும் நிலையும் உருவாகியுள்ளது.

இது தொடர்பாக யாழ். போதனாமருத்துவமனை அதிகாரிகள் குழு அமைச்சு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியசமயம் உங்கள் வைத்தியசாலைக்கு மூன்று எழுதுவினைஞர்களை நியமிக்கலாம் என்று தெரிவித்தனர்.

அதேவேளை இவ்வைத்தியசாலையின் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில் எழுதுவினைஞர்களின்பற்றாக்குறையால் அலுவலக வேலைகளையே துரிதமாக செய்ய முடியவில்லை என்றார். (க)

## இம்முறையும் இல்லை

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு உற்சவம் இவ்வாண்டும் நடைபெறாது. நாட்டு நிலைமை காரணமாக கச்சதீவு புனித அந்தோனியார் கோவில் உற்சவம் நடைபெறாது என்று யாழ். ஆயர் தெரிவித்துள்ளார்.

## கல்வி நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இறிலங்கா கல்வி நிர்வாகச் சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன விண்ணப்பமுடிவு திகதி மார்ச் 23 ஆம் திகதியாகும். இதற்கான அறிவுறுத்தல் வெளிவந்துள்ள அரசாங்க வர்த்தமானி இது வரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

## தேர்தலுக்கு வியாழன் முதல் வேட்பு மனு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் 237 இடங்களுக்கான வேட்புமனு எதிர்வரும் வியாழன் முதல் தாக்கல் செய்யப்படுகிறது.

10 மநகர சபைகள், 33 நகர சபைகள், 194 பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களே இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

## மாணவர்களுக்கிடையிலான வீட்டுத்தோட்டப் போட்டி

(இணுவில்)

இணுவில் பரமானந்த பொது நூலகமும், சனசமூக நிலையமும் மருதனாமடக் கல்விக் கோட்டத்தின் அனுசரணையுடன் உடுவில் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான வீட்டுத் தோட்டப் போட்டியினை நடாத்தவுள்ளது.

போட்டிக்குரியவர் தனது விண்ணப்பப்படிவத்தில் முழுப் பெயர், முகவரி, வகுப்பு, பிரிவு, பிறந்த திகதி, கல்வி பயிலும் பாடசாலை விவசாயப்போதனாசிரியர்பிரிவு என்பன குறிப்பிடப்படல்வேண்டும்.

போட்டிக்குரிய நிபந்தனைகளாகத் தெரிவு செய்யப்படும் பயிர்கள் 4-4-91க்கு முன்னர் நாட்டப்படல் வேண்டும். ஆரம்ப மதிப்பீடு 20 5-91 லும், இறுதி மதிப்பீடு 25-6-91 லும் இடம்பெறும். போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

மேலதிக விபரங்களை விவசாய ஆசிரியர் மூலம் பெற்றுக் கொள்ளும்படியும், விதையினங்கள் சனசமூக நிலையத்திலேயே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராக்கிங் தொடர்பாக கடும் நடவடிக்கைகள்

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் ராக்கிங்கில் ஈடுபட்ட குற்றத்துக்காக அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பல்கலைக்கழக மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக நிர்வாகத்தின் வேண்டுகோளினை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான மாணவர்களைக் கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எம். பீரிஸ் பெற்றோரிடம் ஒப்படைத்தார்

இதேவேளை, ராக்கிங்கில் ஈடுபட்டுக் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட மாணவர் ஒருவர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டுள்ளார் ஒரு வருடம் பல்கலைக்கழகத்திலிருந்து விலக்கியதோடு, அவர் தோற்றிய பரீட்சைக்கான அவரது பெறுபேறுகள் செல்லுபடியாகாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் மகாபொல உதவிப் பணமும் நிறுத்தப்பட்டுள்ளது.

ராக்கிங்கில் ஈடுபட்ட இன்னொரு மாணவரை. நீர் ஏன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணங்களைக் காட்டும்படி உபவேந்தர் பீரிஸ் கேட்டுள்ளார்.

சட்டத்தையும் ஒழுங்கையும் பல்கலைக்கழகங்களில் நிலைநாட்டும் பொறுப்பை பல்கலைக்கழகங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் ஜி. எம். பீரிஸ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## நூல் வெளியீடு

போதிப்பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையினர் நாளை காலை 9.00 மணியளவில் அச்சுவேலி தோப்பு போதிப்பிள்ளையார் கோவில் வசந்த மண்டபத்தில் "போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை" எனும் நூல் வெளியீட்டு விழாவினை யாழ் இந்துக்கல்லூரி அதிபர் அ. சி. குகதாசன் தலைமையில் நடாத்தவுள்ளனர்.

# ஈராக் மீதான உணவுத்தடை

# உடனடியாக அகற்ற வேண்டும்

## - ஐ. நா. சிறப்புத்தூதுவர் பரிந்துரை

(நியூயோர்க்)

ஈராக்கிற்கு எதிரான ஐ. நா. சபையின் உணவுத்தடை, வேளாண்மை உள்வீட்டுப் பொருள்கள் மற்றும் விநியோகம் மீதான தடைகளை உடனடியாக அகற்ற வேண்டும் என ஐ. நா. சபையின் சிறப்புத் தூதுவர் பரிந்துரைத்துள்ளார்.

ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் பெரஸ்டி கொய்யாவின் பணிப்புரையினை அடுத்து ஈராக் சென்ற இத்தூதுவர் அங்குள்ள நிலைமைகளைப்பற்றி அறிந்துகொண்டார். அதன்பின்னர் நியூயோர்க் திரும்பிய அவர் இந்த பரிந்துரையினை ஐ. நா. சபையிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக் மீதான உணவுத்தடையை அகற்றுவது பற்றி பரிசீலிக்க ஐ. நா. பாதுகாப்புச்சபையின் தடை விதிப்பு நிர்வாகக்குழு நேற்றுக் கூடியது.

மூத்த மேற்குத் தேச தூதுவர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிடும்போது "ஐ. நா. சபையின் உணவுப்பொருள் விநியோகத்திற்கு ஈராக் ஒப்புக் கொண்டபின்னர் உணவுப் பொருள் மீதான தடையை ஐ. நா. சபை விலக்கிக் கொள்ளக்கூடும்" என்று தெரிவித்தார்.

# அமெ. போரை திணித்தால் சாகும்வரை போராடுவோம்

## : காஸ்ரோ

(ஹெவானா)

கியூபா மீது அமெரிக்கா போரைத் திணித்தால் சாகும் வரையிலான சண்டை நடைபெறுமென கியூபாத் தலைவர் பிடல் காஸ்ரோ தெரிவித்துள்ளார்.

வளைகுடா யுத்தத்தின் விளைவு குறித்து முதல் தடவையாகத் தனது கருத்தை வெளியிட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் கியூபா ஒருபோதும் அதன் சக்திமிக்க அண்டை நாடான அமெரிக்காவுக்கு எதிராகப் போரைத்தூண்டாது ஆனால் எங்கள்மீது அவர்கள் போரை திணிப்பார்களேயானால் எவ்வாறு அதை எதிர்த்து சண்டையிடுவது என்பதைநாம் அறிவோம். எங்கள்மீது போர் திணிக்கப்படுமானால் அது எமது வெற்றியில் அல்லது மரணத்தில் தான் முடியும் எனக் கூறினார்.

காஸ்ரோ இக்கருத்தைக் கியூபாவின் பாடசாலை மாணவ மத்தியில் கூறினார். கியூபாவின் சர்வாதிகாரியாக இருந்த பட்டிஸ்ராவைக் கொல்ல போராட்ட காலத்தில் ஒருமுறை மாணவர்கள் எடுத்த முயற்சியின் ஞாபகார்த்தமாகவே இம்மாணவர்கள் ஒன்றுகூடியிருந்தனர்.

ஈராக்கிடம் பெரிய இராணுவம் இருந்தபோதிலும் ஈராக்கிய மக்கள் போருக்குத் தயாராக இருக்கவில்லை ஆனால் கியூபாவில் 1959 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின்னர் மக்கள் யுத்தம் என்ற கோட்பாட்டினால் வழி நடாத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். தாக்குதலுக்கு இலக்காகுமிடத்து மக்களை அணிதிரட்டுவதற்கான தந்திரோபாயமாகவே இந்த மக்கள் யுத்தம் இருக்கிறதென்றும் காஸ்ரோ அங்கு குறிப்பிட்டார்.

## வளைகுடாப் போருக்குச் சென்ற

# செனிகல் இராணுவத்தினர் 92பேர் விமான விபத்தில் பலி

சவூதி அரேபியாவில் புனித பயணத்தை மேற்கொண்ட செனிகல் இராணுவத்தைச் சேர்ந்த 92 இராணுவத்தினர் விமானவிபத்தொன்றில் உயிரிழந்தனர் என செனிகல் பாதுகாப்பு அமைச்சர் மிடுவ்பாவ அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சவூதி அரேபியா தென் பகுதியில் இந்த விமான விபத்து நடைபெற்றது. இது பற்றித் தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர் வளைகுடாப் போரில் பங்கேற்ற 500 செனிகல் ராணுவத்தினரில் ஒரு பகுதியினர் சவூதி அரேபியாவின் புனிதஸ்தலங்களுக்கு சென்று கொண்டிருந்த போதே தரை இறங்க முற்பட்ட விமானம் நொருங்கி 92 இராணுவத்தினர் உயிர் இழந்தனர் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இவர்களுடன் சென்றவர்கள் மூவர் மட்டுமே தப்பியிருப்பதாகவும், அவர்கள் மூலமே மிகுதி விபரங்களை அறிய முடியுமென்றும் அவர் தெரிவித்தார். இதே நேரம் இந்தவிபத்துக்கான காரணம் குறித்து இதுவரை எதுவும் வெளியிடப்படவில்லை.

### இரத்ததானம்

தானம் வழங்குவதில் தீவிர ஆர்வம்காட்டி வருகின்றனர்.

நேற்றுவரை பாடசாலை மாணவர்கள் 133 பேரும், வர்த்தக வங்கி ஊழியர்கள், பாடசாலை ஆசிரியைகள் உட்பட 12 பொதுமக்களும் இரத்ததானம் செய்துள்ளனர். இவர்களில் 23 பேர் பெண்களாவர். இரத்ததானம் செய்வதில் பற்றிக்ஸ் கல்லூரி முன்னணியில் திகழ்கிறது.

150க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் தகுதியற்றவர்கள் என வைத்தியர்களினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நேற்றையதினம் யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் ஆகிய பாடசாலைகள் இரத்ததானம் செய்தன.

போதியளவு இரத்தம் கையிருப்பில் உள்ளதினாலும், சேமித்து வைப்பதற்கு குளிரூட்டி சாதனங்கள் பற்றாக்குறையாக இருப்பதனாலும் ஒரேநாளில் பலரிடமிருந்து இரத்தத்தை பெறமுடியாததினாலும் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் அகிலத் திருக்குடும்பக் கன்னியர் மடம், தமிழ்த்திருக் குடும்பக் கன்னியர்மட பாடசாலை மாணவிகளே இரத்ததானம் செய்ய முடியாது திரும்பிச்சென்றனர்.

இவ்வாரம் இரத்ததானம் செய்த பாடசாலைகள் விபரம் வருமாறு

- ★ சென்பற்றிக்ஸ் - 38
- ★ கொக்குவில் இந்து - 29
- ★ யாழ்இந்து - 20
- ★ சென்றல் – 13
- ★ வேம்படி மகளிர் கல்லூரி 12,
- ★ சென்ஜேம்ஸ் 8
- ★ கனகரத்தினம்ம.ம.வி 7,
- ★ வட்டு திருஞானசம்பந்தர் 6,
- ★ பொதுமக்கள் 12 பேர்.

### குடாநாட்டில

பின்னர் சங்கானையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. பரா, திரு. ஐயர், மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. மரிஷால் அப்பா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்

இறுதியாக சங்கானைச் சந்தையில் இருந்து இராணுவ மரியாதையுடன் வீரவேங்கைகளின் புகழுடல்கள் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் சண்டிலிப்பாய்வரை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. வீதியின் இருமருங்கிலும் பெருந்தொகையான மக்கள் குழுமி நின்று பூக்கள் தூவியும், மாலைகள் அணிவித்தும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்னர் சண்டிலிப்பாயில் இருந்து, கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு மாவீரர்களின் பூதவுடல்கள் எடுத்து வரப்பட்டு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் அங்குதகனம் செய்யப்பட்டது.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாக வாழைமரங்களும், தோரணங்களும் கட்டப்பட்டதோடு கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

அதேவேளை குடாநாட்டின் பலபாகங்களிலும் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் வாயிலாக எழுச்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டன தீவகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மறைந்த மாவீரருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு தீவகத்தைச் சேர்ந்தவரான மாவீரர் ஞானரூபனின் இல்லத்திற்கு நேரடியாகச் சென்றும் பலர் அஞ்சலி செலுத்தினர். (15,மு)

# தமிழரிடம் கொள்ளை

(கொழும்பு)

பம்பலப்பிட்டி ஸ்கெரன் வீதியால் சென்று கொண்டிருந்த யாழ். வாசி ஒருவரிடம் பணமும், முக்கிய பத்திரங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

யாழ் போதனா ஆஸ்பத்திரியில் பணியாற்றும் ஒருவரிடமிருந்தே 800 ரூபா பணமும், தேசிய அடையாள அட்டை, மூக்குக்கண்ணாடி ஆகியனவும் கொள்ளையிடப்பட்டன. பொருள்களை களவு கொடுத்தவர் தமக்குப்பின்னால் வந்த ஒரு நபர் திடீரென தம்மீது பாய்ந்து கழுத்தை வளைத்துப் பிடித்துக்கொண்டு முன் சேட் பக்கட்டில் இருந்து பிடுங்கினாராம் என்று பொலிசாரிடம் அவர் புகார் தெரிவித்துள்ளார்.

### தெல்லிப்பளை

'அவ்ரோ' விமானம் வட்டமிட்டதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பாதுகாப்புத் தேடிக்கொண்டனர்.

பொலிகண்டி நவிண்டில் பகுதியில் பலாலியிலிருந்து நேற்று ப்பிற்பகல் 5 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இரு எறிகணைகள் விழுந்து வெடித்ததாகவும் சேதமெதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வேலணை வயோதிப மாது மர்மமாகக் கொலை

(வேலணை)

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவயோதிபப் பெண்ணொருவர் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக இந்தப்பெண்ணின் மிக நெருங்கிய உறவினர்கள் இருவர் மீது சந்தேகிக்கப்படுகிறது.

இறந்த பெண் தனியாகத் தனது வீட்டில் வசித்துவந்ததாகவும், சம்பவதினம் இரவு வீட்டில் படுத்திருந்ததாகவும், மறுநாள் காலை இவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இறந்த பெண் சுமார் 58 வயது மதிக்கத்தக்கவர் என்றும். யாழ்ப்பாணத்திலுள்ள ஹரன் தியேட்டர் உரிமையாளரான திரு பா. சண்முகநாதனின் மனைவியுமாவார் என்றும் தெரியவருகின்றது.

# கச்சதீவு கடற்பரப்பில் இந்தியருக்கும் உரிமையுண்டு

## – மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(இராமேஸ்வரம்)

இந்திய மீனவர்களுக்கும் கச்சதீவுப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிமையிருக்கிறது என்றும், மண்டபம், பாம்பன் பரலம் ராமேஸ்வர கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்படக்கூடாது என்றும், கோரி இந்திய மீனவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றைநடத்தினர்.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் நடந்த இந்த ஊர்வலத்தில் 1974 ஆம் ஆண்டு இருந்ததைப்போலவே கச்சதீவில இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமையினை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரியும். சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## பாகிஸ்தானுக்கான அமெரிக்க

# தூதுவரின் கூற்றிற்கு இந்திய கட்சிகள் கண்டனம்

(புதுடில்லி)

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்லவென பாகிஸ்தானிலுள்ள அமெரிக்கத் தூதுவர் கூறியிருப்பதை இந்தியாவின் முக்கியமான மூன்று அரசியல் கட்சிகள் கண்டனம் செய்துள்ளன

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடத் தேவையில்லை யென பாரதீய ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

# குறைந்த அஸ்பிரின் பாவனை மாரடைப்பைத் தடுக்கும்

(புளோரிடா)

குறைந்த அளவிலான அஸ்பிரின் பாவனை பெண்களிலும் ஆண்களிலும் மாரடைப்பைத் தடுக்க உதவும் என்று அமெரிக்காவின் புதிய ஆராய்ச்சி ஒன்று தெரிவித்துள்ளது.

ஒரு வாரத்தில் ஒன்று முதல் ஆறு அஸ்பிரின் வில்லைகள் உட்கொள்ளும் பெண்கள் மத்தியில் முதலாவது மாரடைப்பு அபாயம் 30 சதவீதம் குறைந்திருப்பதை அறிய முடிந்ததாக ஆராய்ச்சி மேற்கொண்ட டாக்டர் மேனசன் கூறியுள்ளார்.

ஆண்களிடையேயான மாரடைப்பு ஆபத்தை அஸ்பிரின் 44 சதவீதத்தால் குறைக்கும் என்று 1988 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

### 8 போராளிகளின்

குலமோகன் அளவெட்டி தெற்கு)

★ சைமன் (நாகராசா மோகனரூபன், கொக்குவில் மேற்கு)

★ பாப்பா (ராசலிங்கம் பத்மலிங்கம், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்)

★ பீற்றர் (சந்திரநாதன் சிறிஸ்கந்தராசா, வேம்படி லேன், மானிப்பாய்)

★ கஜா (பவானி தனிநாயகம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்)

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★ நேற்று வெளிவந்த வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் பற்றிய செய்தியில் லோகன் (சிவபிரகாசம் சிவலோகநாதன், மிருசுவில்) என்ற போராளியின் பெயர் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது: லெப் ஜெனி (சதிவான் சக்திவேல், புலோலி தெற்கு, பருத்தித்துறை) என்ற போராளியே நேற்றைய விபரத்தில் வர வேண்டிய பெயராகும்.

# ஷப்றாவிற்கு புதிய கட்டடம்

(கொழும்பு)

ஷப்றா யுனிகோ பினான்ஸ் லிமிட்டட் கொழும்பில் தனக்கென ஒரு ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றை அமைத்துள்ளது இக்கட்டடம் எதிர்வரும் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்தில் ஷப்றாவின் தலைமை அலுவலகத்தோடு வேறும் பல வர்த்தக நிலையங்களும் தமது அலுவலகங்களைத் திறக்கவுள்ளன. அத்தோடு ஏ என் இசட் கிறின்ட்லேன் வங்கிக் கிளையும் அமையவுள்ளது.

# மக்கள் வங்கிக்கு 35 மில். ரூபா

மக்கள் வங்கிக்குரிய 35மில்லியன் ரூபா பணம் அடுத்த மாதம் பத்தாம் திகதியளவில் இங்கு வந்து சேரவுள்ள லில்லி கப்பலில் எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (மு)

# பிறப்புப் புத்தகங்கள் வரவுள்ளன

யாழ். மாவட்டத்திற்கான பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பதியும் ஐம்பது புத்தகங்கள் அடுத்து வடபகுதிக்கு வரும் கப்பலில் போடப்பட்டுள்ளன.

இந்த ஐம்பது புத்தகங்களிலும் ஐயாயிரம் பேருடைய பிறப்புஇறப்புக்கள்பதியகூடியதாக இருக்கும் என யாழ். மாவட்ட பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.